(முற்பகல் 9-10)

(3) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகக் கிடங்குகளில் சுமை தூக்கும் பணிகள்

* வினா எண். 664 — திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் சுமைதூக்கும் வேலைகள் காண்ட்ராக்ட் முறையில் அமுல் படுத்தப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தவிர்த்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்:

(அ) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் உள்ள 238 கிடங்குகளில் டெண்டர் மூலமாகவும், காங்கு கூலிகள் மூலமாகவும் காண்டிராக்ட் முறையில் சுமைதூக்கும் வேலைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) காண்டிராக்ட் லேபர் (ஒழுங்கு படுத்துதலும், ஒழிப்பும்) சட்டம், 1970-ன்படி, கழகத்தின் மண்டல நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கிட்டங்கிகளில் வேலை செய்யும் பணியாளர்கள் அங்கேயுள்ள காண்டிராக்டர்கள் மூலம் காண்டிராக்ட் விடுவதன் காரணமாக, அவர்கள் அதிகத் தொகைக்கு காண்டிராக்ட் எடுத்து விட்டு குறைந்த கூலிக்கு ஆட்களை அமர்த்துவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இப்படி அங்கே கூலி வேலை செய்யும் கூலியாட்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொண்டு, அதன் மூலம் கேட்டால், அவர்களுக்குத்தான் காண்ராக்ட் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூலியாட்களை அப்படிப்பட்ட கிட்டங்கிகளில் வேலைக்கு அமர்த்துவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கொண்டு வருகிற நேரத்தில் அவர்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தோடு செயல் படுத்திக்கொள்கிற ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி கூலியாட்களுக்கு சம்பளம் கொடுப்பது

இல்லை என்ற புகார் அரசுக்கு வந்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னது போல் அங்கே வேலை செய்யும் கூலியாட்கள் கூட்டுறவு அடிப்படையில் அவர்களுக்கு ஒப்பந்தம் தரவேண்டும் என்று கேட்டால் கொடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்களுக்கு இது எடுத்துச்சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்கள் இதுவரையில் அந்தவிதமான முயற்சியில்—கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் கூலியாட்கள் காண்டிராக்ட் முறையில் இருப்பதைத் தவிர்க்கும் முறையில், இந்த அரசு வேறு ஒரு செயல்திட்டம் முயற்சித்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அரசு என்ன செயற்குறிப்பு அது குறித்து வைத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்தவிதமான செயற் குறிப்பும் வைத்து இருப்பதாக நான் என்னுடைய பதிலில் சொல்லவில்லை. ஊழியர்கள் அவர்களாகவே கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக்கொண்டு அந்த ஒப்பந்தங்களை எடுக்க முன்வருவார்களானால், அதை அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு யோசிக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதைத்தான் யோசிக்கும் என்று பதில் சொல்லி இருக்கிறேன். அவர்கள்தான் அதற்கு இன்னும் முன்வரவில்லை.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கிகளில் சுமை தூக்கும் தொழிலாளர் களுக்கு காண்டிராக்ட் முறையில் நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளும் அந்த முறையை விட்டு விட்டு, ஒரு டன்னுக்கு நியாயமான அடிப்படையில் சுமை தூக்க என்ன கூலி என்பதை நிர்ணயித்து, அதற்கு ஏற்றவாறு தொழிலாளர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் இந்த முறை இருந்து வருகிறது. ஒப்பந்தக்காரர்கள் — காண்ட்ராக்டர்கள்— ஒரு டன் ஏற்றி, இறக்க இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று கூலி நிர்ணயம் செய்து கொள்கிறார்கள். அந்த அடிப்படையில் காண்ட்ராக்டர்கள் அந்தக் கூலிக்கு எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே, அதிலே எந்தவிதமான மாற்றமும் செய்கிற யோசனை இந்த அரசுக்கு இல்லை. கான்ட்ராக்டர்களுக்குப் பதிலாக ஊழியர்கள் எடுத்துக் கொள்வார்களானால் இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லை.

1979 ஏப்ரல் 9]

திரு. சி. கோவிந்தராசன்; பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிரந்தரமான கழகம். நிரந்தரமாக அதற்கு வேலைகள் உண்டு. அந்த நிரந்தர வேலைகளைச் செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை செய்யும் அளவிற்கு, அவர்களுக்கு வேலை கொடுத்து, இந்த அரசே — கான்ட்ராக்ட் முறையைத் தவிர்த்து — கூலி குறைவாகக் கொடுப்பதை அனுமதிக்காது. அவர்களை நிரந்தரப்படுத்தி, நிரந்தரக் கூலிகளாக அமர்த்த ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்; பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் நிரந்தரமான கழகம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் ஏற்றுவது இறக்குவது போன்ற வேலைகளை நிச்சயமாக நிரந்தரமான வேலைகள் என்று சொல்ல முடியாது. நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இறக்குமதி செய்கிற வேலை அறுவடை காலத்தில் அந்தக் கிட்டங்கிகளில் இருக்க முடியும். வெளியிலே செல்வதற்கு லாரியில் அரிசி ஏற்றிக்கொண்டு செல்கிற வேலை வெளியிலே வியாபாரம் அதிகமாக நம்முடைய கிட்டங்கிகளில் இருக்கிற நேரத்தில்தான் நாம் செய்ய முடியும். நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நம்முடைய உணவுக் கிட்டங்கிகளில் விற்பனை அதிகம் இல்லாத காரணத்தால், அதிகமான அரிசி வெளியே போவது இல்லை. குறைந்து இருக்கிறது. ஆகவே ஏற்றுமதி, இறக்குமதி வேலைகள் நிரந்தரம் என்று சொல்வதற்கு இல்லை.

*வினா எண். 665— திரு. ஒ. சோ. வேலுச்சாமி; மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தின் தமிழ்நாடு அரசு சிவில்சப்ளைஸ் கார்ப்பரேஷன் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கூலியாக 1–5–76 முதல் 31–3–78 முடிய உள்ள காலத்திற்கு டன்னுக்கு ரூ. 2.80 பைசா வீதம் தனியார் வியாபாரிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்டதா ?

(ஆ) 1–5–76 முதல் 31–3–78 முடிய வேலை செய்த சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு 1 டன்னுக்கு ரூ. 2.80-க்கும் குறைந்த தொகை கூலியாகக் கொடுக்கப்பட்டதா ?

(இ) பாக்கி கூலித் தொகையை சுமைதூக்கும் தொழிலாளர்கள் தங்களுக்கு கொடுக்க வற்புறுத்துகிறார்களா ?

(ஈ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?